இருக்கின்றன. அதையொட்டிய பகுதிகளிலும் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவே, அரசு இவற்றைக் கணக்கில் கொண்டு உடனடியாக அங்கே பழுதுபட்டு இருக்கும் வண்டிகளைப் பழுது பார்க்கவும், மேலும் புதிய ஒரு யூனிட்டை ஏற்படுத்தித் தரவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இந்தத் துணை வினா கேட்கப்பட்டு, பதிலளிக்கப்பட்டதால், இந்தத் துணைக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

District Judges from Scheduled Castes

and Scheduled Tribes appointed during 1976,

* Q. No. 565: THIRU L. ELAYAPERUMAL: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) the number of District Judges recruited from the Scheduled Castes and Scheduled Tribes during the year 1976; and

(b) whether the reserved quota from Scheduled Castes and Scheduled Tribes has been filled up?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) மற்றும் (ஆ): 1976ஆம் ஆண்டில் ஒரு மாவட்ட நீதிபதி பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டது. இத்தேர்வு மாவட்ட நீதிபதி பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்படும் போது பதவி ஒதுக்க விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்னும் அரசு ஆணை அமுலுக்கு வந்தபின் செய்யப்பட்ட முதல் தேர்வாகும். அவ்விதிகளின்படி, முதல்முறைத் தேர்வு, 'பொதுத் தேர்வு,' மூலம் நிரப்பப்பட வேண்டியதாகும். எனவே பொதுத் தேர்வின் மூலம் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டிய முறை (turn) அப்போது வரவில்லை.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிபதிகள் நியமனத்தில் ஆதிதிராவிடர்களுக்கு அரசு ஒதுக்கீடு எந்த முறையில் செயல்படுகிறது? மற்ற அரசுத் துறைகளில் உள்ளது போல் விழுக்காடு அடிப்படையிலா அல்லது ஏதாவது தனிப்பட்ட முறையிலா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 10–2–1975–ல் ஒரு விதிமுறைகள் வகுக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு என்றும், உயர் வகுப்பினர்களுக்கு என்றும், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்கு என்றும் கோட்டா ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் 1976–ஆம் ஆண்டில் ஓர் இடம் காலியானபோது, அதை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த இடத்தில் பொதுப்பட்டியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமிக்கப்பட வேண்டும் என்கிற காரணத்தால், பிற்படுத்தப்பட்டவர்களும், ஆதிதிராவிடர் வகுப்பினரும் போட்டியிடலாம். அப்போது 88 மனுக்கள் பெறப்பட்டன. உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும் மற்ற இரண்டு உயர்நீதி மன்றம் நீதிபதிகளும் நேர்முகத் தேர்வு நடத்தி 3 பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். திரு. பெய்சி முகமது, கே. கோவிந்தன், எஸ். கல்யாணம். இதிலே திரு. கோவிந்தன் என்பவர் கள்ளக் கடத்தல் கூட்டம் ஒன்றுக்குத் தலைமை தாங்குகிறார் என்றும், இராமேஸ்வரத்தில் இருந்து மதுரைக்கு தங்கம், வெள்ளி போன்றவற்றை கடத்திச் செல்ல முயல்கிறார் என்றும் புகார்கள் வந்ததால், அவரை நியமனம் செய்வது சரியல்ல என்ற முடிவுக்கு வந்த பிறகு, திரு. பெய்சி முகமது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

[முற்பகல் 9-10]

பெய்சி முகமது இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்: எஸ். கல்யாணம் ஆதித்திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அந்த பட்டியலில் அவர்கள் பெயர் இருந்தாலும் பெய்சி முகமது என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குப் பின்னால் ஏற்படும் காலி இடத்திற்கு அந்த 'டேர்ன்'படி அரிசன மக்களுக்கு வரும். ஆனால் 1976–ஆம் ஆண்டு அது எழவில்லை.

திரு. ராஜகுமார் விஜயரகுநாத தொண்டைமான் : தலைவரவர்களே, 1976–ஆம் ஆண்டு பாக்வர்டு கிளாசுக்கு எவ்வளவு நீதிபதிகள் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. பெய்சி முகமது பாக்வர்டு கம்யூனிடியாகத்தான் இருக்குமென்று கருதுகிறேன். ஏனென்றால் இஸ்லாமிய சமூகத்தினர் பாக்வர்டு பட்டியலில் சேர்க்கப்பட்ட பிறகுதான் இந்தத் தேர்வு நடைபெற்றிருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும் இது பொதுப்பட்டியலிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டியது ஆகையால் உயர் வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர்களும் போட்டியிடலாம். அந்த அடிப்படையில் தேர்வுக்கு வந்ததில், ஒரே ஒரு இடம் தான் இருந்தது, அந்த இடத்திற்கு பெய்சி முகமது தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1981 மார்ச் 31]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த நிதித் துறையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 18 சத வீதம் இதுவரை நிரப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அமைச்சரவர்கள் இங்கே சொல்லும்போது கோவிந்தன் அவர்கள் பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அவர்மீது ஏதாவது சார்ஜ் ஜீட் போடப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறாரா? பதவி உயர்வு போன்றவை வருகின்ற இத்தகைய சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே உண்மைக்கு மாறான தகவல்களை கொடுத்து, அவர்களுடைய பதவி உயர்வு முடக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பைச் சொன்னேன். விசாரணையின்போது அவரே ஒப்புக்கொண்டதாகவும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி. இதிலே உண்மைக்கு மாறாக எதுவும் நடைபெற்றிருக்காது என்று கருதுகிறேன். ஏனென்றால் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களும் மற்ற நீதிபதிகளும் இருந்துதான் தேர்வு செய்திருக்கிறார்கள். முறை தவறி ஏதாவது நடைபெற்றதாகத் தெரிந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாவட்ட நீதிபதி போன்ற உயர்ந்த பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒதுக்கீடு இல்லை.

வேதாரண்யேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான உப்பள நிலங்கள்.

*வினா எண். 566—திரு. எம். எஸ். மணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம், வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான உப்பள நிலங்களை மத்திய அரசு எடுத்துக்கொண்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை கோவிலுக்குத் திரும்பப்பெற முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*113 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றது.